# குற்றச்சாட்டுக்களைக் கண்டு பின்வாங்கப் போவதில்லை!



## அநுரகுமார திஸாநாயக்க

கொழும்பு, ஒக். 21

தேசிய மக்கள் சக்தி ஒருபோதும் பொதுமக்களது நிதியைத் துஷ்பிரயோகம் செய்ததில்லை, என அக்கட்சியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நடைபெற்ற பேரணியில் உரையாற்றியபோதே நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க இதனைக் குறிப்பிட்டுள்ளார். ஒருவரின் பணப் பரிவர்த்தனை தொடர்பாக இந்த நாட்களில் பிரசாரம் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த நாட்டு மக்களின் பணத்தில் ஒரு சதம் கூட நானோ அல்லது எனது கட்சியைச் சேர்ந்த எவருமோ திருடவில்லை - அல்லது வீணடிக்கவில்லை.

அவ்வாறு மக்களின் பணம் திருடப்பட்டாலோ அல்லது வீணாக்கப்பட்டாலோ இப்படி அரசியல் செய்ய முடியாது. அவதூறுகள் மற்றும் குற்றச்சாட்டுக்களைக் கண்டு நாம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை.

எமது கட்சி பிரபலமடைந்து வருவதால் எதிர்காலத்தில் இதுபோன்ற விடயங்கள் மேலும் அதிகரிக்கும்!, என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 03 திங்கட்கிழமை 21.08.2023 கதிர் 54

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

## சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகள் பூர்த்தியாக்கப்படவில்லை - வெரிட்டே ரிசேர்ச்

சர்வதேச நாணய நிதியத்தினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளில் 35 வீதத்தை மாத்திரமே இலங்கை பூர்த்தி செய்துள்ளதாக வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத் திட்டத்தினைப் பகுப்பாய்வு செய்வதற்காக வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் முன்னெடுத்த ஆய்வின் அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

நிபந்தனைகளில் 57 வீதமானவை இந்த வருடம் ஜுலை மாதத்திற்குள் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என்ற நிலையில், 35 வீதமான நிபந்தனைகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக குறித்த நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதன்படி, சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தைகளுக்கு அமைய இலங்கை தமது நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யவில்லை என வெரிட்டே ரிசேர்ச் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

செப்டம்பரில் இடம்பெறவுள்ள முதல் மறுபரிசீலனைக்கு முன்னர் இலங்கை அரசாங்கம் 71 வீத நிபந்தனைகளையாவது பூர்த்தி

2➤

## நல்லூரான் கொடி ஏறியது!



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

பெருந்திரளான பக்தர்களின் அரோகரா கோஷத்துக்கு மத்தியில் சிவச்சாரியார்களின் வேத மந்திரங்கள் ஒலிக்க கொடியேற்றம் இடம்பெற்றது.

பெருமளவான பக்தர்கள் தங்கள் நேர்த்திக் கடனை நிறைவேற்றும் பொருட்டு அங்கப்பிரதட்சணம் உட்பட பல்வேறு நேர்த்திகளில் ஈடுபட்டனர்.

2➤

## விசேட வைத்திய நிபுணர்கள் கறுப்புப் பட்டியலில் இணைப்பு!

நாட்டை விட்டு வெளியேறிய 120 விசேட வைத்திய நிபுணர்கள் கறுப்புப் பட்டியலில்

இணைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டு ஜனவரி 9 ஆம் திகதி முதல் இந்த வருடத்தின் ஓகஸ்ட் 18 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் 363 வைத்தியர்கள் வெளிநாட்டுப் பயிற்சிக்காகச் சென்றுள்ள-னர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## இறக்குமதியாகும் வெங்காயத்தின் விலையில் அதிகரிப்பு ஏற்பட்டது!

சந்தையில் இறக்குமதியாகும் வெளிநாட்டு வெங்காயத்தின் விலை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

140 முதல் 160 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்ட வெளிநாட்டு பெரிய வெங்காயத்தின் மொத்த விலை தற்போது சந்தையில் 200 முதல் 210

2➤

## பிறப்பு - திருமணம் - இறப்புச் சான்றிதழ் பிரதிகளின் 6 மாத செல்லுபடி விதி நீக்கம்

பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும் என்ற விதிமுறைகள் நீக்கப்பட்டுள்ளதாக பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

வழங்கப்பட்ட எந்தவொரு சான்றிதழ்களினதும் பிரதிகள் இருந்தால், புதிய நகலைப் பெறத் தேவையில்லை என்று திணைக்களம் தெரிவிக்கிறது.

ஆனாலும் பிறப்பு, திருமணம் மற்றும் இறப்புப் பதிவேட்டில் திருத்தம் செய்யப்பட்டிருந்தால் மட்டும் புதிய நகலைச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பதிவாளர் நாயகம் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக, பதிவாளர் நாயகம் திணைக்களம், கல்வி, வெளிவிவகார அமைச்சுக்கள், குடி வரவு மற்றும் குடியகல்வு பதிவுத் திணைக்களங்களுக்கு அறிவித்துள்ளது.

## சிங்கப்பூர் ஜனாதிபதியையும் பாதுகாப்பு அமைச்சரையும் சந்தித்தார் ஜனாதிபதி ரணில்



இரண்டு நாட்கள் உத்தியோகபூர் விஜயம் மேற்கொண்டு சிங்கப்பூர் சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்கப்பூர் ஜனாதிபதி ஹலீம யாகோப்
பையும், பாதுகாப்பு அமைச்சர் கலாநிதி நெங் எங் ஹென்னையும் சந்தித்தித்துள்ளார்.

இதன்போது பூகோள அரசியல் மேம்பாடுகள் மற்றும் கடல்சார் நாடுகளின் பிராந்திய ஸ்திரத்தன்மையின் முக்கியத்துவம் தொடர்பில் கலந்தாலோசிக்கப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில், இருநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இன்று அதிகாலை சிங்கப்பூருக்குப் பயணித்திருந்தார்.

இந்த விஜயத்தில் தேசிய பாதுகாப்பு தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன,

2➤

# மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கோகுலராஜன் பதவியேற்பு



(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றி, மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக பதவி உயர்வு பெற்ற பாலரட்ணம் கோகுலராஜன் இன்று மட்டக்களப்பு மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையேற்றுக் கொண்டார்.

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற கடமையேற்பு நிகழ்வில் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் பேரில் கடந்த ஜனவரி முதலாம் திகதிமுதல் செயற்படும் வண்ணம் மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக பதவி உயர்த்தப்பட்ட பி.கோகுலராஜன், நிந்தவூர் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக மிகச் சிறப்பான முறையில் பணியாற்றியவராவார்.

2004 ம் ஆண்டு கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக நியமனம் பெற்ற இவர் பொத்துவில், கல்முனை தமிழ் பிரிவு, காரைதீவு ஆகிய பிரதேச செயலகங்களில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக அர்ப்பணிப்புடன் செயலாற்றி பலரது நன்மதிப்பையும் பெற்றவர்.

கிழக்கு மாகாண மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு அமைவாக நடத்தப்பட்ட நேர்முகப் பரீட்சையில் சித்தியடைந்து, மாவட்ட கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக கிழக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் இவர் நியமிக்கப்பட்டார்.

# 38 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் அதிரடிப்படையினரால் கைது

(வி.ரி.சகாதேவராஜா)

அக்கரைப்பற்று பனங்காடு மகாசக்தி கிராமம் பகுதியில் வைத்து 38 கிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒரு சந்தேகநபரை இன்று திருக்கோவில் விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர்.

அவரிடம் இருந்து பாரியளவிலான ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டதன் காரணமாக, அவரை 72 மணித்தியாலங்கள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் அனுமதியோடு அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் "வி" அறிக்கையினை அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தாக்கல் செய்திருந்தார்.

அவ்வழக்கானது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம் முகமட் ஹம்சா, சந்தேக நபரை 72 மணித்தியாலங்கள் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்வதற்கு அனுமதி வழங்கியதோடு, 72 மணித்தியாலங்கள் முடிந்தவுடன் அவரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு அக்கரைப்பற்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு கட்டளையும் பிறப்பித்தார்.

# 50 அடி பள்ளத்தில் வீழ்ந்தது கப் ரக வாகனம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் படுகாயம்!

நானுஓயாவில் கப் ரக வாகனமொன்று வீதியை விட்டு விலகி 50 அடி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதில் 6 பேர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு - பிலியந்தலையிலிருந்து நுவரெலியா நகருக்குப் பயணித்த குறித்த கப் ரக வாகனம் கிரிமிட்டி பகுதியில் விபத்துக்குள்ளாகியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்த விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் படுகாயமடைந்துள்ளனர். அவர்கள் அனைவரும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வாகனத்தின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் போனமையால் விபத்து இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் நானுஓயா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (03)

# அநுராதபுரத்தில் கோர விபத்து! தாயும் மகளும் பரிதாப மரணம்!!

லொறி ஒன்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் தாயும் மகளும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தக் கோர விபத்து அநுராதபுரம் - விலாச்சி வீதியில் உள்ள கதிரேசன் கோயிலுக்கு அருகில் இன்று இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 36 வயதான தாயும், 9 வயதான அவரது மகளும் சாவடைந்துள்ளனர். இந்த விபத்து தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (03)

# பணவீக்கத்தில் மாற்றம்!

தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண் படி, ஜூலை மாதத்தில் நாட்டின் பணவீக்கம் 4.6 சதவீதமாகக் குறைந்துள்ளதாக மக்கள் தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஜூன் மாதத்தில் இலங்கையின் பணவீக்கம் 10.8 வீதமெனக்கன குறிப்பிடப்பட்டிருந்தது.

இதற்கிடையில், உணவு வகைக்கான பணவீக்கம் 2.5 ஆகக் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச நாணய நிதியத்தின் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்ய வேண்டும்.

இதன்படி, தற்போதைய நிலையில் ஒகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் ஒவ்வொரு மாதமும் தலா 18 நிபந்தனைகளையாவது பூர்த்தி செய்ய வேண்டும் என வெரிட்டி ரிசேர்ச் சுட்டிக்காட்டியுள்ளது.

அதேநேரம், அடுத்த மாதம் 14ஆம் திகதி சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள நிலையில், குறித்த குழுவினர் செப்டெம்பர் 27 ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருப்பார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள விரிவாக்கப்பட்ட கடன் வசதியின் முதலாவது மீளாய்வுக்காகவே இந்தப் பிரதிநிதிகள் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

## நல்லூரான் கொடி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செங்குந்த மரபினரால் வடிவமைக்கப்பட்ட கொடிச்சீலை பாரம்பரிய முறைப்படி நேற்று வேல் மடம் ஆலயத்துக்கு எடுத்து வரப்பட்டு, அங்கு விசேட பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், சிறிய தேரொன்றில் எடுத்து வரப்பட்டு நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் கையளிக்கப்பட்டது.

கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ள மஹோற்சவம் எதிர்வரும் செப்ரெம்பர் 14 ஆம் திகதி இடம்பெறவுள்ள தீர்த்தத் திருவிழா வரையான 25 நாள்களுக்குத் தொடர்ந்து நடைபெறவுள்ளது. (01)

## சீன கடல் ஆராய்ச்சிக் கப்பல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

வெங்காயத்திற்கு இந்தியா ஏற்றுமதி வரி விதித்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

தனது உள்நாட்டின் முக்கிய சந்தைகளில் வெங்காயத்தின் சராசரி மொத்த விற்பனை விலை ஜூலை முதல் ஒகஸ்ட் வரை சுமார் 20 வீதம் வரை உயர்ந்துள்ளதால், டிசம்பர் 31ஆம் திகதி வரை ஏற்றுமதி வரியை விதிக்க இந்தியா முடிவு செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி, இந்த ஏற்றுமதி வரி இலங்கை, பங்களாதேஷ், நேபாளம், மலேசியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் போன்ற நாடுகளைப் பாதிக்கும் எனவும் கருத்துக்கள் பகிரப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் நேற்று வெங்காய விற்பனை இடம்பெறவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (04)

## சிங்கப்பூர் ஜனாதிபதியையும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார அலுவல்கள் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச்.எஸ். சமரதுங்க ஆகியோரும் உடன் சென்றுள்ளனர். (04)

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# மருந்துத் தட்டுப்பாட்டின் மத்தியிலும் மன்னாரில் சிறப்பாகச் செயல்படும் சிறுநீரக சிகிச்சைப் பிரிவு

(மன்னார் நிருபர்)

இலங்கையில் அண்மைக்காலமாக சிறுநீரகம் சம்பந்தமான பிரச்சினைகளால் பாதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

குறிப்பாக சிறுநீரகத் தொற்று, சிறுநீரக்க் கற்கள், சிறுநீரகச் சிதைவு, சிறுநீரகச் செயலிழப்பு உள்ளடங்கலாக சிறு நீரகங்களுடன் தொடர்புடைய அதிகளவான நோய்க் காரணிகள் அதிகரித்துள்ளதுடன் இதன் காரணமாக ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

குறிப்பாக, நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக ஏற்பட்டுள்ள மருந்துத் தட்டுப்பாடுகளும் இவ்வாறான மரண அதிகரிப்புக்கு காரணங்களாக அமைகின்றன.

மனித உடலில் சிறுநீரகமானது சாதாரண நிலையில் 10 சென்றி மீற்றர் அளவு கொண்டிருக்கும் போது சிறுநீரகமானது தனது தொழிற்பாட்டை சாதாரணமாக மேற்கொள்ளும். இருப்பினும் உணவுப் பழக்கவழக்கம், அன்றாட நடவடிக்கைகள், நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற காரணிகளால் சிறுநீரகங்களில் ஏற்படும் பாதிப்பினால் அந்தச் சிறுநீரகங்கள் சிறிதாவதுடன் அதன் செயற்பாடுகளும் மாற்றங்களுக்கு உள்ளாகின்றன.

குறிப்பாக, சிறுநீரகப் பாதிப்பு ஏற்படும்போது பொதுவாக உடலினால் மேற்கொள்ளப்படும் கழிவகற்றல் செயற்பாடானது முற்றிலும் பாதிக்கப்படுவதுடன் வெளியேற வேண்டிய கழிவுகள் அனைத்தும் உடலில் சேகரிக்கப்பட்டு விடுகின்றன.

இவ்வாறு உடலினுள் சேகரிக்கப்படும் கழிவுகள் இரத்தத்திலும் உடலில் உள்ள பாகங்களிலும் நுரையீரல், வயிற்றுப் பகுதிகளில் தேங்கும்போது உடல் வீக்கம், சோர்வு, மயக்கம், மூச்சுத்திணறல் உள்ளடங்கலாக பல்வேறு நோய் அறிகுறிகள் தோற்றம் பெறுவதுடன் சிலரது உடலில் கழிவுகள் அதிகமாகின்றபோது மரணத்திற்கும் உள்ளாகின்றனர்.

இவ்வாறான நிலையில் சிறுநீரக மாற்றுச் சிகிச்சை முழுமையான தீர்வாக காணப்படுகின்ற போதும் பொருத்தமான சிறுநீரகங்கள் கிடைப்பதென்பது அரிதிலும் அரிதானதாக உள்ளது.

இவ்வாறான நிலையில் சிறுநீரக நோயாளர்களை நோய் நிலையில் இருந்து பாதுகாப்பதற்கான சிறந்த முறை அவர்களின் குருதியில் காணப்படும் கழிவுகளை அகற்றும் குருதிச் சுத்திகரிப்பு முறையாகும்.

இவ்வாறான சிறந்த குருதிச் சுத்திகரிப்பு முறையை மன்னார் மாவட்டப் பொது வைத்தியசாலையில் அமைந்துள்ள மன்னார் குருதிச் சுத்திகரிப்பு சிகிச்சைப் பிரிவு ஐந்து வருடங்களாகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகிறது.

வைத்தியர் சிசில் மற்றும் வைத்தியர் மல்ஷா ஆகியோரின் கீழ் இயங்கும் மன்னார் குருதிச் சிகிச்சை பிரிவின் கீழ் தற்போது 60 சிறுநீரக நோயாளர்கள் சிறப்பான சிகிச்சையைப் பெற்று வருகின்றனர் என்பதுடன் சிறுநீரகப் பிரச்சினைகளால் ஏற்படும் மரணங்களின் எண்ணிக்கையும் சடுதியாக்க் குறைந்துள்ளது.

குறிப்பாக, மருந்துத் தட்டுப்பாடுகள் உட்பட பல்வேறு பிரச்சினைகளையும் கடந்து, உள்ளூர் மற்றும் வெளியூர் நோயாளிகளுக்குச் சிகிச்சை வழங்கும் விதமாக குறித்த சிகிச்சைப் பிரிவு ஐந்து வருடங்களில் சிறப்பாக வளர்ச்சி அடைந்துள்ளது.



கடந்த 2018 க்கு முன்னர் மன்னார் மாவட்டத்தில் சிறுநீரகச் சிகிச்சைப் பிரிவு இன்மையால், பல சிறுநீரக நோயாளிகள் தங்கள் சாதாரண சிகிச்சைக்காகக்கூட மன்னார் மாவட்டத்தில் இருந்து யாழ்ப்பாணம், வவுனியா, அனுராதபுரம் போன்ற மாவட்டங்களுக்குச் செல்ல வேண்டிய அவல நிலை காணப்பட்டது.

அதிலும் அவசர நோயாளர்கள் பலர் சிகிச்சை நிலையங்களுக்கு மன்னாரில் இருந்து அனுப்பப்படுவதற்கு முன் பல உபாதைகளுக்கு உள்ளாகியிருந்த கசப்பான அனுபவங்களும் உண்டு.

இதைவிட, கடந்த 2017 ஆம் ஆண்டு மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சிறுநீரக நோயாளி ஒருவர் இரத்தச் சுத்தீகரிப்பு சிகிச்சைக்காக அனுராதபுரம் சென்று திரும்பிய நிலையில், பேருந்துத் தரிப்பிடத்தில் இறந்த சம்பவம் மன்னாரில் பதிவாகியிருந்தது.

இவ்வாறான நிலையில், மன்னார் மாவட்டத்தில் சிறுநீரக சிகிச்சை நிலையத்தின் தேவையின் முக்கியத்துவத்தின் அடிப்படையில், இரண்டு நோயாளிகளுக்கு சிகிச்சை வழங்கக் கூடிய விதத்தில் அக்காலப் பகுதியில் வைத்தியசாலையில் காணப்பட்ட வளங்களைக் கொண்டு கடந்த 2018 ஆம் ஆண்டு சாதாரண இரத்த சுத்திகரிப்பு சிகிச்சைப் பிரிவு ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

தற்போது அந்தப்பிரிவின் வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்களின் அர்ப்பணிப்பின் காரணமாக 60 நோயாளிகளைப் பராமரிக்கக் கூடிய அளவில் சிறந்த சிகிச்சையை வழங்கி வருகிறது.

மன்னார் மாவட்டத்தில் உள்ள ஐந்து பிரதேச செயலகங்களையும் உள்ளடக்கிய 140 கிராமங்களைச் சேர்ந்த மக்களும் பயனடையும் வகையில் இந்த சிகிச்சைப் பிரிவு தனது சிகிச்சையின் தரத்தை அதிகரித்துள்ளது.

ஒரு சிறுநீரக நோயாளி கட்டாயம் வாரத்துக்கு 2 அல்லது 3 முறை இந்த நிலையத்திற்கு வருகை தந்து இரத்தச் சுத்திகரிப்பில் ஈடுபட வேண்டிய அவசியம் உள்ள நிலையில், வாரத்தில் ஏழு நாட்களும் இந்தப் பிரிவு சேவையாற்றுகிறது.

சாதாரணமாக ஒரு நோயாளிக்கு இரத்தச் சுத்திகரிப்புக்கு நான்கு மணித்தியாலங்கள் தேவைப்படும். எனவே, மாதத்திற்கு குறைந்தது 500 தடவைகள் சுத்திகரிப்பு செயற்பாடுகள் இந்த நிலையத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இவை தவிர்த்து, பாம்புக் கடி, சலரோகம், சிறுநீர் கிருமித் தொற்று போன்ற நோய் காரணமாக வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் அவசர நோயாளிகளுக்கான இரத்த சுத்திகரிப்புச் சேவையையும் இந்த நிலையம் மேற்கொண்டு வருகின்றது.

சாதாரண அடிப்படை வசதிகள் இன்றி ஆரம்பிக்கப்பட்ட இந்த சிகிச்சைப் பிரிவு, ஐந்து வருடங்களில் வாரத்துக்கு 140 நபர்களுக்கும் நாள் ஒன்றுக்கு 20 நபர்களுக்கும் சிகிச்சை வழங்க்க் கூடியவகையில் வளர்ச்சியடைந்துள்ளது.

வெறுமனே மன்னார் மாவட்ட சிறுநீரக நோயாளர்கள் மாத்திரமின்றி வெளிமாவட்டத்தினரும் பயன் பெறும் வகையில் அந்தப் பிரிவின் வைத்தியர்கள், தாதியர்களின் ஒத்துழைப்பில் இச்சிகிச்சை நிலையம் வளர்சியடைந்துள்ளது.

தற்போது இது, ஒரே நேரத்தில் 8 நபர்கள் குருதிச் சிகிச்சையைப் பெறும் அளவுக்கான கொள்ளளவைக் கொண்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் சிறுநீரகம் சம்பந்தப்பட்ட நோய்கள் அதிகரித்துள்ள நிலையில் மன்னார் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்தச் சிகிச்சைப் பிரிவினை முழுமையாகப் பயன்படுத்துமாறு வைத்தியர் சிசில் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறுநீரக நோயுடன் தொடர்புடைய அறிகுறிகள் காணப்படும் பட்சத்தில் வைத்தியசாலை வைத்தியர் ஊடாக தங்களது சிறுநீரக்க் குருதிச் சுத்திகரிப்புப் பிரிவின் சேவையை பொதுமக்கள் பெறமுடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

மருந்துப் பொருட்களின் விலையேற்றம், வாழ்க்கைச் செலவுகள் உட்பட அனைத்தும் அதிகரித்துள்ள நிலையில் மக்களின் செலவைக் குறைத்து, அவர்களுக்கு போதிய சேவையை வழங்குவதற்கான மேலதிக வாய்ப்புகளையும் வளங்களையும் இந்தச் சிகிச்சைப் பிரிவின் வைதியர்கள் தேடிவருகின்றனர் .

சர்வதேசத் தரம் மிக்க சிகிச்சையையும் ஒரே நேரத்தில் 20க்கும் மேற்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கக் கூடிய வாய்ப்புகளையும் இப்பிரிவினர் உருவாக்கக் காத் திருக்கின்றனர்.

இவ்வாறான சிகிச்சைப் பிரிவு மன்னார் மாவட்டத்திற்குக் கிடைக்கப்பெற்றது முக்கியமானது.

இந்தச் சிகிச்சைப் பிரிவின் வளர்சிக்காக நன்கொடைகள், மருத்துவ உதவிகள், சிகிச்சை உபகரணங்களுக்கான உதவிகளை வழங்கக்கூடியவர்கள் முன்வந்து உதவுவது காலத்தின் தேவையாகும்.



# பேரணியில் ராணுவத்துக்கு எதிராகப் பேச்சு!

## பாகிஸ்தான் முன்னாள் அமைச்சரின் மகளை இரவு உடையில் இழுத்துச் சென்ற பொலிசார்



பாகிஸ்தான் நாட்டில் அமைச்சராக இருந்தவர் ஷிரீன் மஜாரி. இவரது மகள் இமான் ஜைனப் மஜாரி, மனித உரிமைகள் அமைப்பின் வழக்கறிஞராக இருப்பவர்.

இந்நிலையில், சமூக ஊடகத் தளங்களில் ஒன்றான எக்ஸ்-ல் (முன்பு டுவிட்டர்) மஜாரி வெளியிட்ட பதிவொன்றில், மர்ம நபர்கள் எனது வீட்டின் கண்காணிப்புக் கமராக்களை உடைத்து கொண்டிருக்கின்றனர். கதவுகளை உடைத்தும், அதன் மீது ஏறி, ஓடியும் கொண்டிருக்கின்றனர் என தெரிவித்திருந்தார்.

நேற்று அதிகாலை 3.50 மணியளவில் பதிவு வெளியான சில மணிநேரங்களில் அவர் கைது செய்யப்பட்டார். இதற்கு சமூக ஆர்வலர்கள் மற்றும் மனித உரிமை குழுக்கள் தரப்பில் இருந்து கடுமையான கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இந்த கைது நடவடிக்கையை இஸ்லாமாபாத் பொலிசார் உறுதிப்படுத்தி உள்ளனர்.

அலி வாசீர் மற்றும் இமான் மஜாரி ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டனர். இருவரும் விசாரணைக்காக தேடப்பட்டு வந்தவர்கள். சட்டப்படி அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும், விசாரணையில் உள்ள வழக்குப் பற்றிய விவரங்களை பொலிசார் குறிப்பிடவில்லை.

ஆனால், சமீபத்தில் நடந்த பாஷ்டூன் இயக்கத்தின் பேரணி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய மஜாரி, ராணுவத்திற்கு எதிரான விமர்சனங்களை வெளியிட்டார் என கூறப்படுகிறது. முன்னாள் ராணுவ தளபதி காமர் ஜாவித் பஜ்வாவுக்கு எதிராக தகாத வகையில் பேசினார் என மஜாரிக்கு எதிராக குற்ற வழக்கு ஒன்றும் பதிவானது.

இந்நிலையில் மஜாரியின் தாயார் ஷிரீன், இரவு உடையில் இருந்த தனது மகளை வேறு உடை அணியக்கூட விடாமல், பொலிசார் தரதரவென இழுத்துச் சென்றனர். வாரண்டோ அல்லது சட்ட நடைமுறைகளோ இல்லை. இரு பெண்களான நாங்கள் மட்டுமே வீட்டில் வசிக்கிறோம். இது ஒரு கடத்தல் என குற்றஞ்சாட்டியுள்ளார்.

தனது மகளின் லப்டொப் மற்றும் கைப்பேசியையும் அவர்கள் எடுத்துச் சென்று விட்டனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

## லெபனானில் பாடசாலைகள் ஆயுதக் குழுவின் கட்டுப்பாட்டில்

### ஐ.நா. அலுவலகம் கடும் அதிருப்தி



பாலஸ்தீன நாட்டில் நிலவும் உள்நாட்டுக் கலவரத்தால் அண்டை நாடான லெபனானில் ஏராளமானோர் அகதிகளாகத் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இங்குள்ள மிகப்பெரிய பாலஸ்தீன அகதிகள் முகாமான ஐன் அல்-ஹெல்வேயில் ஆயுதம் ஏந்திய குழுவினர் அவ்வப்போது தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன்படி கடந்த மாதம் நடைபெற்ற வன்முறையின் போது அவர்கள் 7 பள்ளிக்கூடங்களை தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். இந்த நிலையில் தற்போது மேலும் ஒரு பள்ளிக்கூடத்தை அவர்கள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாக அறிவித்துள்ளனர்.

இதற்கு லெபனானில் உள்ள பாலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. விவகார அலுவலகம் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. ஆயிரக்கணக்கான மாணவர்களின் கல்வி பாதிக்கப்படும் என்பதால் உடனடியாக அந்தப் பள்ளிக்கூடங்களை விட்டு வெளியேறுமாறு ஐ.நா. எச்சரிக்கை விடுத்துள்ளது.

## உக்ரைனின் ட்ரோன் தாக்குதலின் எதிரொலி மொஸ்கோ விமானப் போக்குவரத்து பாதிப்பு



ரஷ்ய தலைநகர் மொஸ்கோவை குறிவைத்து உக்ரைன் ராணுவம் இன்று ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தி உள்ளது.

மொஸ்கோ பிராந்தியத்தை குறிவைத்து நடந்த இந்த தாக்குதலை முறியடித்ததாக ரஷ்யா தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தலைநகருக்கு மேற்கே ரஸ்ஸ்கி மாவட்டத்தில் உக்ரைனின் ஒரு ட்ரோனை செயலிழக்க வைத்ததாகவும், அருகிலுள்ள இஸ்ட்ரின்ஸ்கி மாவட்டத்தில் மற்றொரு ட்ரோனை அழித்ததாகவும் ரஷ்ய பாதுகாப்புத்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இந்த ட்ரோன்களின் பாகங்கள் வீட்டின் மீது விழுந்ததில் 2 பேர் காயமடைந்தனர்.

ட்ரோன் தாக்குதல் காரணமாக மொஸ்கோவின் 4 முக்கிய விமான நிலையங்களில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டன. விமான நிலையங்களில் இருந்து சுமார் 50 விமானங்களின் புறப்பாடு மற்றும் வருகை தடைசெய்யப்பட்டது.

## நிலவில் விழுந்து நொறுங்கியது ரஷ்யா அனுப்பிய விண்கலம்!

### தொழிநுட்பக் கோளாறு காரணம்



நிலவின் தென் துருவத்தில் தரையிறங்குவதில் முதல் இடத்தை பிடிப்பது யார் என்பதில் இந்தியா, ரஷ்யா நாடுகளுக்கு இடையே போட்டி நிலவுகிறது.

அந்த வகையில் இந்தியாவின் 'சந்திரயான்-3' விண்கலத்துக்குப் போட்டியாக ரஷ்யா கடந்த 10-ந் திகதி 'லூனா-25' என்ற விண்கலத்தை விண்ணில் செலுத்தியது. 'சந்திரயான்-3' விண்கலத்துக்குப் பல நாள் கழித்து விண்ணில் ஏவப்பட்ட போதிலும் ரஷ்ய விண்கலத்தை 'சந்திரயான்-3'க்கு முன்பே நிலாவில் தரையிறக்க திட்டமிட்டு அதற்கான பணிகளை மேற்கொண்டு வந்தது ரஷ்ய விண்வெளி ஆய்வு மையமான ரோஸ்கோஸ்மோஸ்.

அதன்படி கடந்த 17ஆம் திகதி நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள் ரஷ்யாவின் 'லூனா-25' விண்கலம் வெற்றிகரமாக நுழைந்தது. தொடர்ந்து, படிப்படியாக சுற்றுப்பாதையை குறைக்கும் பணிகள் நடந்து வந்தன. அதன் தொடர்ச்சியாக 'லூனா-25' விண்கலம் இன்று நிலவின் தென் துருவத்தில் தரையிறங்க இருந்தது.

விண்கலத்தை வெற்றிகரமாக தரையிறக்குவதற்கான நடவடிக்கைகளை ரோஸ்கோஸ்மோஸ் மேற்கொண்டு வந்தது.

இந்த நிலையில் தொழில்நுட்பக் கோளாறு காரணமாக 'லூனா-25' விண்கலம் நிலவில் விழுந்து நொறுங்கியதாக ரோஸ்கோஸ்மோஸ் நேற்று தெரிவித்தது. முன்னதாக விண்கலத்தில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இறுதிக்கட்ட சுற்றுப்பாதையை குறைப்பதில் சிக்கல் ஏற்பட்டதாகவும், அதனால், விண்கலத்துடனான தொடர்பை இழந்ததாகவும் ரோஸ்கோஸ்மோஸ் கூறியிருந்தது.

அதைத் தொடர்ந்து, விண்கலத்துடன் மீண்டும் தொடர்பை ஏற்படுத்த விஞ்ஞானிகள் தீவிரமாக முயற்சித்த நிலையில் 'லூனா-25' விண்கலம் கணிக்க முடியாத சுற்றுப்பாதையில் நகர்ந்து நிலவின் மேற்பரப்பில் மோதி நொறுங்கியதாக ரோஸ்கோஸ்மோஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதன் மூலம் 47 ஆண்டுகளுக்கு பிறகு நிலவை ஆய்வு செய்ய ரஷ்ய எடுத்த முயற்சி தோல்வியில் முடிந்துள்ளது. கடந்த 1976 ஆம் ஆண்டு, ரஷ்யாவை உள்ளடக்கிய சோவியத் ஒன்றியம் 'லூனா 24' விண்கலத்தை நிலவுக்கு அனுப்பியது. அதன் பிறகு ரஷ்யா சார்பில் முதல் முறையாக நிலவுக்கு அனுப்பப்பட்ட விண்கலம் நிலவில் மோதி நொறுங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டு வெடிகுண்டு வீச்சு? சென்னை கல்லூரியில் அதிர்ச்சி




சென்னை கிண்டி - வேளச்சேரி சாலையில் உள்ள பிரபல தனியார் கல்லூரியில் இருவேறு வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்குள் மோதல் நிலவி வந்துள்ளது.

இந்த நிலையில், மாணவர்களுக்குள் இன்று மீண்டும் மோதல் ஏற்பட்டுள்ளது. அப்போது மாணவர்களில் ஒரு தரப்பினர் நாட்டு வெடி குண்டு வீசியதாக கூறப்படுகிறது.

பலத்த சத்தத்துடன் வெடித்ததால் மாணவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இது தொடர்பாக கல்லூரி நிர்வாகம் அளித்த புகாரின் பேரில் விரைந்து வந்த போலீசார், விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சுகாதார அமைச்சருக்கு எதிராக முல்லைதீவில் கையெழுத்துச் சேகரிப்பு

சுகாதார அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்திற்கு வலுச் சேர்க்கும் கையெழுத்துப் போராட்டமும் விழிப்புணர்வு நடவடிக்கையும் முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில் நாட்டில் மருந்து தட்டுப்பாடு ஏற்பட வழி வகுத்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை மாற்றி, மருந்துத் தட்டுப்பாட்டிற்குத் தீர்வு காணுங்கள், எனக் கூறி சபாநாயகர் இடம் கொடுக்கவுள்ள மனுவுக்கு வலுச் சேர்க்கும் கையெழுத்துப் போராட்டமும் துண்டுப் பிரசுர விநியோக விழிப்புணர்வு நடவடிக்கையும் புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது, நாட்டில் பொதுமக்களின் சுகாதார சேவையின் பாதிப்புத் தொடர்பான துண்டுப்பிரசுரம் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, மக்களிடமிருந்து கையெழுத்து பெறுவதும் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளர் முத்துகுமாரசாமி லக்சயன் தலைமையில் இந்த கையெழுத்து சேகரிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது புது குடியிருப்பு பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் சத்தியசுதர்சன் மற்றும் ஆதரவாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். (04)

# நீ கொன்ற எதிரி நான்தான் தோழா கவிதை நூல் வெளியீட்டு விழா






தமிழ் தேசிய இலக்கியப் பேரவை ஏற்பாட்டில் கவிஞர் தியாவின் "நீ கொன்ற எதிரி நான் தான் தோழா " கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வு நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் கவிஞர் தீபச்செல்வன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், வடக்கு மகாண சபை முன்னாள் உறுப்பினர் குருகுலராஜா, கரைச்சி பிரதேச சபை முன்னாள் தவிசளர் வேழமாலிகிதன் என பலரும் கலந்துகொண்டனர்.

# யாழ்.பல்கலையில் "நினைவு நல்லது" நூல் அறிமுக விழா!




யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் "நினைவு நல்லது" எனும் நூல் அறிமுக விழா இடம்பெறவுள்ளது.

ஒலி, ஒளி ஊடகர் பி.விக்னேஸ்வரனின் ஐம்பதாண்டுகளுக்கும் மேலான அனுபவப் பகிர்வு-களுடன் கூடிய "நினைவு நல்லது" என்ற அந்த நூலின் அறிமுக நிகழ்வு, எதிர்வரும் 29 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. (க)

# காலி முகத்திடலில் உணவு விற்பனை செய்பவர்களுக்கு அடையாள அட்டை!

கொழும்பு காலி முகத்திடலில் உள்ள உணவு விற்பனையாளர்களைப் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதனூடாக பதிவு செய்யப்பட்ட உணவு விநியோகஸ்தர் எனும் அடையாள அட்டையை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இளநீர் விற்பனையாளர்கள் உள்ளிட்ட அனைத்து வகையான உணவு, பானப் பொருட்களையும் விற்பனை செய்வோரை அடையாளங்கண்டு, அவர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்படும் என கொழும்பு நகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி ருவன் விஜேமுனி தெரிவித்துள்ளார்.






# உடையார் கட்டில் இறந்த நிலையில் யானையின் உடல் கண்டெடுப்பு!

முல்லைத்தீவு வன ஜீவ ராசிகள் திணைக்களத்திற்கு உட்பட்ட பகுதியான உடையார் கட்டு தெற்குப் பிரதேசத்தில் உள்ள காட்டுப்பகுதியில் இறந்து ஐந்து நாட்கள் ஆகியிருக்கக்கூடிய நிலையில் யானை ஒன்றின் உடல் கண்டெடுக்கப்பட்டது.

மக்களால் வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய, புதுக்குடியிருப்பு பொலிசார் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களம் இணைந்து நேற்றைய தினம் மேற்கொண்ட தேடுதலில் யானையின் உடல் இனங்காணப்பட்டுள்ளது.

இறந்த யானையின் தந்தம் மற்றும் வால் பகுதி போன்றவை வெட்டி அகற்றப்பட்டுள்ளன. யானையின் முன் காலில் பாரிய காயம் ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

யானை இறந்ததற்கான காரணம் இதுவரையில் அறியப்படவில்லை எனவும், யானையின் உடல் பகுதி பரிசோதனைக்காக எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாகவும் முல்லைத்தீவு மாங்குளம் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்தினர் தெரிவித்துள்ளனர். (02)

# 1000 மரக்கன்றுகள் நடும் செயற்றிட்டம் ஆரம்பம்!





பேண்தகு அபிவிருத்தி இலக்குகளில், பருவகால மாற்றத்தினால் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொள்வதற்காக, வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் முன்னெடுக்கப்படும் 1000 மரக்கன்றுகள் நடும் செயற்றிட்டம் இன்று யாழ் செம்மணி பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் இ.பகீரதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு மரநடுகைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் எஸ்.பிரணவநாதன், நல்லூர் பிரதேச சபைச் செயலாளர் யு.ஜெலீபன், வலிகாமம் தெற்கு கமக்கார அமைப்பின் செயலாளர் ந.கஜேந்திரகுமார், செம்மணி இந்து மயானத் தலைவர் இ.லட்சுமிகாந்தன், இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பா.பிரதீபன், நல்லூர் வடக்கு சனசமூக நிலையத் தலைவர் பூ.லிங்கநாதன், நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையத் தலைவர் இ.ரூபன் ஆகியோர் கலந்துகொண்டு மரக்கன்றுகளை நாட்டி வைத்தனர்.

இந்த நிகழ்வில் பிரதேசசபை உத்தியோகத்தர்கள் மற்றும் அப் பிரதேச கிராம மக்களும் கலந்து கொண்டனர். (01)

# யாழ் இளைஞர் பௌத்த சங்கம் அங்குரார்ப்பணம்





யாழ் இளைஞர் பௌத்த சங்கத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் சிவில் சமூக நிலையத்தின் தலைவர் அருண் சித்தார்த் தலைமையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கொழும்பு பௌத்த இளைஞர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பொருளாதார நிவாரண உதவித் திட்டத்தினூடாக 250 கர்ப்பிணிப் பெண்களுக்கு இதன்போது உலர் உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கூரஹல ரஜமஹா விகாரையின் விகாராதிபதி சங்கைக்குரிய வத்துறகும்புற தம்மரத்தன தேரர், பலாங்கொட இம்புல்பே விஜித வன்ச தேரர், யாழ்ப்பாணம் நாகவிகாரையின் விகாராதிபதி மீஹஜந்துர விமலதர்ம சுவாமி, கொழும்பு இளைஞர் பௌத்த சங்கத்தின் தலைவர் மகேந்திர ஜயசேகர மற்றும் அவர்களது குழுவினரும் கலந்து கொண்டிருந்தனர். (01)

# நல்லூரில் வைரவர் உற்சவமும் புதிய சப்பற வெள்ளோட்டமும்



நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மகோற்சவத்தை முன்னிட்டு, வைரவர் உற்சவமும் புதிய சப்பறத்தின் வெள்ளோட்டமும் நேற்றைய தினம் இடம்பெற்றன. (01)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.08.2023இல் வெளியிடப்பெற்றது.